பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 02 வியாழக்கிழமை 18.11.2021 கதிர் 241

## மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் சிக்கினர்

நுவரெலியா, பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செப்பல்டன் தோட்டத்தில் அனுமதிப்பத்திரமின்றி மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். ☞2



## அவசரமாகக் கூடுகின்றன பிரதான முஸ்லிம் கட்சிகள்

வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பில் நடந்து கொள்ள வேண்டிய விதம் குறித்து தீர்க்கமான தீர்மான மொன்றை எடுப்பதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங் கிரஸ் ஆகிய கட்சிகள் ☞2

## பிரித்தானிய தூதருடன் ரெலோவினர் சந்திப்பு

### அதை கூட்டமைப்புச் சந்திப்பு என்கிறது ரெலோ



இலங்கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் ஸாரா ஹல்டன் அம்மையாருடன் இன்று வியாழக்கிழமை ரெலோவின் பிரமுகர்கள் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டனர்.

வழமைபோல அந்தச் சந்திப்பு தொடர்பில் செய்தியை வெளியிட்ட ரெலோ செய்தித் தொடர்பாளர், அது கூட்டமைப்புடனான சந்திப்பு என்று எழுத்தில் செய்தியாக அறிவித்தார். ☞2

# ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பதற்கான உரிமையை எவரும் தடுக்கவே முடியாது

## அரசின் பங்காளியான சு.க. அதிரடி

எதிர்க்கட்சியினர் என்ற ரீதியில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பதற்கு அவர்களுக்கு உரிமை காணப்படுகின்றது. ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கான உரிமையை எவராலும் தடுக்க முடியாது.

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். ☞2



## யாழில் நாவலர் சிலை திறப்பு



(இ.கலையமுதன்)

நாவலர் கலாசார மண்டபத்தின் நுழைவாயிலில் யாழ். மாநகர சபையின் உறுதுணையுடன் சைவ மகா சபையால் நிறுவப்பட்ட நாவலர் பெருமானின் திரு ☞2

## 36 ஆயிரம் மெட்ரிக் டன் பெற்றோல் ஏற்றிய கப்பல் இன்று இலங்கைக்கு

36 ஆயிரம் மெட்ரிக் டன் பெற்றோல் ஏற்றிய கப்பல் இன்று நாட்டை வந்தடையவுள்ளது என இலங்கை பெற்றோலிய களஞ்சியசாலை முனையங்கள் நிறுவனத்தின் தலைவர் மொஹமட் உவைஸ் தெரிவித்தார்.

இந்தக் கப்பல் இன்றிரவு 8 மணியளவில் நாட்டை வந்தடையவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். ☞2

## இரு மாணவர்கள் டெங்கால் மரணம்

பதுளை பொதுச் சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இவ்வாரம் இரண்டு மாணவர்கள் உள்ளிட்டு மூவர் டெங்குக் காய்ச்சலால் உயிரிழந்துள்ளமையுடன், 261 பேர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று பதுளை பொதுச் சுகாதார சேவை பணிப்பகம் தெரிவித்துள்ளது.

பதுளையில் டெங்கு தடுப்பு வேலைத்திட்டத்தை பதுளை மாநகர சபையினர், பிரதேச செயலகத்தினர், பொலிஸ் நிலையத்தினர், இராணுவத்தினர் ☞2

### மகளின்பதிவுத்திருமணத்துக்காக

## வவுனியாவிலிருந்து சென்றவர்கள் கல்கமுவவில் விபத்தில் சிக்கினர்!

### ஒருவர் பலி; ஐவர் படுகாயம்



(ந.லோகதயாளன்)

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிச்சென்ற ஹையஸ் வாகனம் கல்கமுவ பகுதியில் இன்று அதிகாலை விபத்துக்குள்ளானதில் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர். ☞2

## சிவபூமி அறக்கட்டளை நிதியம் அமைத்த கீரிமலை முதியோர் இல்லம் இன்று திறப்பு



(எஸ்.நிதர்ன், இ.கலையமுதன்)

சிவபூமி அறக்கட்டளை நிதியத்தால் கீரிமலையில் அமைக்கப்பட்ட முதியோர் இல்லம் இன்று திறந்து வைக்கப்பட்டது. ☞2

## அம்பாந்தோட்டைத் தொழிற்சாலையில் 45 இந்தியப் பிரஜைகளுக்குத் தொற்று

அம்பாந்தோட்டை முதலீட்டு வலயத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் சீமெந்து தொழிற்சாலையில் பணியாற்றி வரும் 45 இந்தியப் பிரஜைகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

அம்பந்தோட்டை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தால் குறித்த சீமெந்து தொழிற்சாலையில் பணியாற்றிவரும் 50 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 45 இந்தியப் பிரஜைகளுக் ☞2

## கொரோனாத் தாக்கத்தால் 4 பாடசாலைகளுக்குப் பூட்டு

பதுளை மாவட்டத்தின் ஹல்துமுள்ளை கல்விப் பிரிவைச் சேர்ந்த நான்கு பாடசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஒரு பாடசாலை முழுமையாக மூடப்பட் ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## மாணிக்கக்கல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொகவந்தலாவை பிரதேசத்தைச் சேர்ந்த 25, 31 வயதுகளையுடைய இருவரே இதன்போது கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொகவந்தலாவை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கொரோனாத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளதுடன், ஏனைய மூன்று பாடசாலைகளில் குறிப்பிட்ட வகுப்புக்களைக் கொண்ட கட்டடத் தொகுதிகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன என்று ஹல்துமுள்ளை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அசங்க சம்பத் தெரிவித்தார்.

கொஸ்கம வித்தியாலயத்தில் அதிபர், ஆசிரியர்கள் மூவருக்குக் கொரோனாத் தொற்று உறுதியானதால், அந்த வித்தியாலயம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

அத்துடன் சொரகுன மகா வித்தியாலயத்தில் தரம் 1, தரம் 2, தரம் 11 ஆகிய வகுப்புகளைக் கொண்ட கட்டடத் தொகுதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

அமிலகம மகா வித்தியாலயத்தில் தரம் 5 வகுப்புகளைக் கொண்ட கட்டடத் தொகுதியும் மூடப்பட்டுள்ளது. அடுத்து இலுக்பெலெஸ்ஸ மகா வித்தியாலயத்தின் தரம் 3 வகுப்புகளைக் கொண்ட கட்டடத் தொகுதியும் மூடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட நான்கு வித்தியாலயங்களின் வகுப்புக்கள் உள்ள கட்டடத் தொகுதிகளுக்குக் கிருமிநாசினி தெளித்து சுத்தப்படுத்துவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதிபர், ஆசிரியர்கள் மூவர் மற்றும் நான்கு மாணவர்கள் ஆகியோருக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது என அவர்களிடம் மேற்கொண்ட 'ரெபிட் அன்டிஜன்' பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதுடன், தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணியவர்களை அடையாளம் கண்டு, அவர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், லுணுகலையில் மூன்று சிறு பிள்ளைகள் உள்ளிட்ட 13 பேர் கொரோனாத் தொற்றால் பீடிக்கப்பட்டுள்ளனர். 12 மாத ஆண் குழந்தை மற்றும் 3, 4 ஆகிய வயதுகளைக் கொண்டவர்களுக்கே தொற்று உறுதியாகியுள்ளது.

லுணுகலை பொதுச் சுகாதாரப் பணியகத்தில் மேற்கொள்ளப்பட்ட 'ரெபிட் அன்டிஜன்' பரிசோதனையின்போதே, மூன்று சிறு பிள்ளைகள் உள்ளிட்டு 13 பேர், தொற்றுக்குள்ளாகியமை தெரியவந்துள்ளது என லுணுகலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

## வவுனியாவிலிருந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரவூர்தியுடன் ஹையஸ் வாகனம் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் நடைபெறவிருந்த தமது மகளின் பதிவு திருமணத்துக்காக வவுனியா, தோணிக்கல் பகுதியில் இருந்து சென்ற குடும்பத்தினரே விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

விபத்தில் வாகனச் சாரதி மற்றும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் என 6 பேர் படுகாயமடைந்த நிலையில் மூவர் கல்கமுக வைத்தியசாலையிலும் மூவர் அநுராதபுர வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டனர். அநுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 22 வயதுடைய இளைஞன் பின்னர் மரணமடைந்துள்ளார்.

விபத்துக்குள்ளான இரு வாகனங்களும் கல்கமுவ பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளமையுடன், மேலதிக விசாரணைகளை கல்கமுக பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## சிவபூசி அறக்கட்டளை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு திருமுருகனின் முயற்சியின் பயனாக சிவபூமி அறக்கட்டளையினரால் முதியோர் இல்லம் அமைக்கப்பட்டு இன்று பலரின் பங்குபற்றலுடன் வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நல்லூர் ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், ஆன் மீகச்சுடர் ரிசி தொண்டுநாத சுவாமிகள், யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜ ஜெயபாஸ்கரன், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராசா, யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

## அம்பாந்தோட்டை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான தொழிலாளர்கள், அம்பாந்தோட்டை பழைய வைத்தியசாலையில் உள்ள கொரோனா சிகிச்சை நிலையத்தில் சேர்க்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

குறித்த தொழிற்சாலையில் தமிழர்கள், சிங்களவர், இந்தியர்கள் உள்ளடங்கலாக 1,160 ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

சுமார் 480 இந்தியர்கள் குறித்த தொழிற்சாலையில் பணியாற்றி வருகின்றனர். தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## ஆர்ப்பாட்டத்தை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக் கட்சியின் புதிய தொகுதி அமைப்பாளர்களை நியமிப்பதற்கான நேர்முகத் தேர்வு கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றபோது ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்-

எதிர்க்கட்சியினர் என்ற ரீதியில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பதற்கு அவர்களுக்கு உரிமை காணப்படுகின்றது. எவ்வாறிருப்பினும் கொரோனா நிலைமையைக் கருத்தில்கொண்டு அதற்கு ஏற்றால்போல் ஏற்பாடுகளைச் செய்திருக்கலாம். காரணம் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டதன் பின்னர் அவை தொடர்பில் கவனம் செலுத்த முடியாது.

பெரும்பாலானவர்கள் ஒரே இடத்தில் கூடியிருக்கும்போது எவ்வாறு தொற்று பரவும் என்பதை அனைவரும் அறிவர். எவ்வாறிருப்பினும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கான உரிமையை எவராலும் தடுக்க முடியாது. நாம் வேறு பயணத்தை ஆரம்பிக்கவில்லை.

மாறாக கட்சியை மேலும் வலுப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். கட்சியை வலுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வோம் - என்றார்.

## அவசரமாகக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவசரமாகக் கூடவுள்ளன.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தின்போது முஸ்லிம் எம்.பிக்கள் அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வாக்களித்ததால் அதேபோன்று இம்முறை வரவு - செலவுத் திட்டத்திலும் அவர்கள் அப்படி நடந்து கொள்ளலாம் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. இதையடுத்தே இந்த கூட்டங்கள் நடக்கவுள்ளன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. அக்கட்சியிலிருந்து விலகிய முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெமீல் மீண்டும் கட்சியில் இணைவது குறித்து அன்று பேசப்படவுள்ளது. அதேபோல் பட்ஜட்டை எதிர்த்து வாக்களிப்பதா அல்லது இறுதி வாக்கெடுப்பை தவிர்ப்பதா என்பது குறித்தும் பேசப்படவுள்ளது.

இதற்கிடையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், நாளைமறுதினம் சனிக்கிழமை கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்திக்கவுள்ளார். வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பது என்ற தலைமையின் முடிவை அவர் அன்றைய தினம் விவரிக்கவுள்ளார் என்று அறியமுடிந்தது.

## பிரித்தானிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது மாத்திரமல்ல, அந்தச் செய்தியின் முடிவில் தமது பதவி நிலையை, 'ரெலோ ஊடகப் பேச்சாளர் - தமிழ்தேசியக் கூட்டமைப்பு' - என்று குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அது ரெலோ கட்சிப் பிரமுகர்களுடனான சந்திப்புத்தான் என கொழும்பில் பிரித்தானியத் தூதரக வட்டாரங்கள் காலைக்கதிருக்கு உறுதிப்படுத்தின.

'பிரித்தானிய உயர் ஸ்தானிகருடன் கூட்டமைப்பினர் சந்திப்பு' - என்ற தலைப்பில் ரெலோ செய்தித் தொடர்பாளர் விடுத்த செய்திக் குறிப்பின் முழு விவரம் வருமாறு:-

இலங்கைக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகர் ஸாரா ஹல்டன் அம்மையார் உடனான சந்திப்பு ஒன்றை கூட்டமைப்பினர் மேற்கொண்டிருந்தனர். 18 நவம்பர் 2021 வியாழக்கிழமை காலை எட்டரை மணிக்கு கொழும்பில் அமைந்த உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் மற்றும் சட்டத்தரணி தயாபரன் ஆகியோர் கலந்து கொண்டனர்

வடக்கு கிழக்கு பகுதிகளில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் ஐ.நா. பிரேரணை சம்பந்தமாகவும் முக்கியமாக கலந்துரையாடப்பட்டது.

பிரித்தானியாவின் தலைமையிலே ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் கொண்டுவரப்பட்ட 46/1 பிரேரணையின் முக்கியத்துவம், அதில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள், அவற்றில் காணப்படுகின்ற முன்னேற்றங்கள், அதன் அடிப்படையில் செயற்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் என்பனவற்றில் கவனம் செலுத்தப்பட்டது. கால வரையறையோடு கொண்டு வரப்பட்ட இந்தப் பிரேரணையில் பிரேரிக்கப்பட்ட விடயங்களை நிறைவேற்ற 18 மாதங்களே உள்ளன. அதில் அரசாங்கம் நிறைவேற்ற வேண்டிய விடயங்கள் ஒருபுறம் இருக்க, தமிழ் தரப்பினரால் நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்களிலும் அக்கறை செலுத்துவது பற்றி கருத்துக்கள் தெரிவிக்கப் பட்டன.

இதன் பிரகாரம் தமிழ் மக்கள் முகம் கொடுத்திருக்கும் முக்கிய பிரச்சினையான காணி அபகரிப்பு, இனக் குடிப்பரம்பல் சிதைப்பு என்பவற்றை தற்காலிகமாக தடுத்து நிறுத்தும் முயற்சியாக ஐ.நா. பிரேரணையில் பரிந்துரைக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை முற்று முழுதாக நிறைவேற்றுவது, மாகாணசபை தேர்தல்கள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது.

தமிழர்கள் ஒருமித்த நிலைப்பாட்டில் சம்பந்தப்பட்ட தரப்புகளை வலியுறுத்துவது, அதன் முக்கியத்துவம், அதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அவற்றின் முன்னேற்றம், ஆதரவு தரப்புக்கள், எதிர்கால நகர்வுகள் என்பன பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது.

நாடு எதிர்கொண்டிருக்கும் பொருளாதாரச் சிக்கல்கள், தமிழ் மக்களும் நாட்டு மக்களும் முகம்கொடுக்கும் அவலங்கள், கொரோனா நோய்த் தொற்றுத் தடுப்பு நடவடிக்கைகளின் தற்போதைய நிலை என பிற விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம் நடைபெற்ற இந்த சந்திப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது.

- சுரேந்திரன், ஊடகப் பேச்சாளர் ரெலோ, தமிழ் தேசியக் கூட்டமைப்பு.

- இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

## யாழில் நாவலர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுருவச் சிலை திறந்து வைக்கப்பட்டது.

கார்த்திகை தீபத் திருநாளான இன்று காலை 10.30 மணியளவில் இறை வணக்கம் செலுத்தப்பட்டு நந்திக்கொடி ஏற்றப்பட்டதுடன் நாவலர் பெருமானின் சிலை திறந்துவைக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையின் பிரதி மாநகர ஆணையாளர் பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன், அகில இலங்கை சைவ மகா சபையின் பொதுச்செயலாளர் பரா.நந்தகுமார் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

'பருவ கால மழை நீர் முகாமையும் திருக்கோவில் குளங்களும்' எனும் தலைமையில் சர்வராசாவின் சிறப்புரையும் இதன்போது இடம்பெற்றது.

## 36 ஆயிரம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேநேரம், 40 ஆயிரம் மெட்ரிக் டன் டீசல் ஏற்றிய கப்பல் நேற்றிரவு நாட்டை வந்தடைந்துள்ளது.

அதற்கமைய, குறித்த டீசல் தொகைகடன் அடிப்படையில் கொண்டு வரப்பட்டுள்ளது என இலங்கை பெற்றோலிய களஞ்சியசாலை முனையங்கள் நிறுவனத்தின் தலைவர் கூறினார்.

இந்நிலையில், நாட்டில் போதுமான அளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது எனவும், எந்தவித எரிபொருள் தட்டுப்பாடும் ஏற்படாது எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், 40 ஆயிரம் மெட்ரிக் டன் டீசல் ஏற்றிய கப்பல் ஒன்று நாளை நாட்டை வந்தடையவுள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## இரு மாணவர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் இணைந்து துரிதமாக மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த இரு நாள்களில் பதுளையில் 450 கட்டடத் தொகுதிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றில் அரச உத்தியோகத்தர்களின் அரச வீடுகள், அரச நிறுவனங்கள் உள்ளிட்ட 25 இடங்கள், டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய இடங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளமையுடன், குறிப்பிட்ட 25 இடங்களின் பொறுப்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும், டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 261 பேருக்கும் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வருகிறது அடுத்த ஆப்பு

பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கும் நாட்டையும் அரசையும் மற்றொரு நெருக்குவாரம் சூழும் ஆபத்து நிலை – ஏதுநிலை – தென்படுகின்றது.

ஏற்கனவே கொரோனாப் பேரிடர், விவசாயிகள் போராட்டம், விலைவாசி உயர்வு, பணவீக்கம், அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதிக்குக் கூட அந்நிய செலாவணிக் கையிருப்பு இல்லை என்று பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க முடியாது நாடும் அரசும் தடுமாறுகின்றன.

அந்தப் பின்புலத்தில்தான் புதிய நெருக்குவாரம் கருக்கட்டியிருக்கின்றது.

மேற்படி நெருக்கடிகள், அழுத்தங்களுக்கு மத்தியில் பிறிதொரு சிக்கலுக்குத் தீர்வு காணமுயன்ற அரசு, அந்தத் தீர்வு எத்தனம் மூலம் அதிலும் பாரிய புதிய நெருக்கடியை விலை கொடுத்து வாங்கியிருக்கின்றது என்பது தான் அரசுக்கு நேர்ந்துள்ள துர்ப்பாக்கிய நிலைமையாகும்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் வரை அரசுக்கு நெருக்கடி தரும் வகையில் தமது கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு தொழிற்சங்கப் போராட்ட முஸ்தீபில் தீவிரமாக இருந்தனர் அதிபர்கள், ஆசிரியர்கள். தங்களின் சம்பள முரண்பாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு தராவிட்டால் கொரோனாப் பேரிடர் பின்னடைவுகளுக்கு மத்தியில் மீண்டும் துளிர்விட வாய்ப்புக் கிடைத்திருக்கும் பாடசாலைக் கல்வி நடவடிக்கைகள் முற்றிலும் படுத்துவிடும் என்று அதிபர்கள், ஆசிரியர்களின் தொழிற்சங்கங்கள் எச்சரித்தன. அடையாள தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் அவை இறங்கின. அதிபர்கள், ஆசிரியர்களின் இந்த நடவடிக்கைகளையும் அவற்றுக்குக் கிடைத்த மக்களின் உணர்வெழுச்சி ரீதியிலான ஆதரவையும் கண்டு மிரண்டு போனது அரசு. அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டு நீக்கம் தொடர்பான கோரிக்கைகளை நிறைவேற்ற மறுத்து ஆரம்பத்தில் முரண்டு பிடித்த அரசு, அவர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளின் வீச்சைக் கண்டு பிரமித்துப் போயிற்று. அதனால் அடங்கிப் பணிந்து தானாகவே கீழே இறங்கி வந்தது. அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்கும் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்காக இந்த வரவு – செலவுத் திட்டத்தில் முதற்கட்டமாக மூவாயிரம் கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்து அறிவித்தது.

இப்படி அந்தத் தொழிற்சங்கப் போராட்டத்திற்கு அரசு மண்டியிட்டமை பிற அரச ஊழியர்களின் தொழிற்சங்கங்களைத் தட்டி எழுப்பி உசுப்பி விட்டிருக்கின்றது.

ஏழு லட்சம் அரச ஊழியர்களைத் தனது உறுப்பினர்களாகக் கொண்டிருப்பதாகக் கூறிக் கொள்ளும் இலங்கை அரச அதிகாரிகள் தொழிற்சங்க சம்மேளனம் விலைவாசி உயர்வைச் சமாளிப்பதற்காக 18 ஆயிரம் ரூபாவிற்கும் குறையாத சம்பள உயர்வை வழங்க வேண்டும் என்று அரசை இப்போது வலியுறுத்தியுள்ளது.

"இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சர் ஆகியோரும் எழுத்தில் முன்னறிவிப்புக் கொடுத்துள்ளோம். அடுத்த இரண்டு வாரத்துக்குள் – அதாவது நவம்பர் 27 ஆம் திகதிக்கு முன்னர் – எமது கோரிக்கைக்கு சாதகமான பதில் அரசுத் தரப்பிடமிருந்து வரா விட்டால் முன்னறிவித்தல் இன்றி தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவோம். எமது போராட்டத்துக்கு ஆதரவு வேண்டி அரச ஊழியர்களின் பிற தொழிற்சங்கங்களுடனும் பேச்சு நடத்தி வருகின்றோம்" – என அரச அதிகாரிகள் தொழிற்சங்கச் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே முன்னர் குறிப்பிடப்பட்ட நெருக்கடிகளினாலும், அரசுக்கு எதிரான மக்களின் உணர்வெழுச்சிப் போராட்டங்களினாலும் துவண்டு போய்க் கிடக்கும் ஆட்சித்தரப்புக்கு நிரந்தர ஆப்படிக்கும் எத்தனமாக அரச ஊழியர்கள் அரசுக்கு எதிராகக் களமிறங்கப் போகின்றார்கள். என்ன செய்யப் போகின்றது ஆட்சித் தரப்பு?



# அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வில்லை!

## அரசாங்கம் திட்டவட்டம்

அரச சேவையாளர்கள் நாட்டுக்கு சுமை என நிதி அமைச்சர் கூறவில்லை என அமைச்சரவை பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான டலஸ் அழகபெரும தெரிவித்துள்ளார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் –

அரச சேவையாளர்கள் நாட்டுக்கு சுமை என நிதி அமைச்சர் கூறவில்லை. அவர் அரச சேவையையும் அரச அதிகாரிகளையும் அவ்வாறு கூறவில்லை.

குறிப்பாக, தற்போதைய அரசாங்கம் உள்ளிட்ட அனைத்து அரசாங்கமும் பாரிய தவறொன்றைச் செய்துள்ளன. அதன்படி, அரசில்தீர்மானமொன்றைஎடுத்துக்கொண்டு தங்களுடைய வாக்குகளுக்காக அரச சேவை நிரப்பிவைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, எங்களுடைய அமைச்சின் கீழுள்ள ஒரு நிறுவனத்தில் 2016 ஆம் ஆண்டு சுயமாக ஓய்வுபெறும் முறையொன்றை முன்வைத்து 600 பேர் ஓய்வு பெற்றுச் சென்றனர். ஆனால், 2021ஆம் ஆண்டு அதே 600 பேர் அமைச்சர்மார் அல்லது அரசாங்கத்தினால் சேவையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு அரசாங்கமும் அமைச்சர்களும் அரச சேவைகளை நிரப்புவதற்கு முன்னெடுக்கும் முயற்சிகளே இதற்கு காரணம். இதனால் அரச நிறுவனங்களுக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த சுமையையே நிதி அமைச்சர் சுட்டிக்காட்டினார். முற்றாக, அரச சேவை மற்றும் அரச அதிகாரிகள் நாட்டுக்கு சுமை என்றோ அவர் கூறவில்லை.

இதேவேளை, அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்ப்பதே இந்த வரவு – செலவுத்திட்டத்தால் தீர்க்கப்பட வேண்டியிருந்த பாரிய பிரச்சினையாக இருந்தது. இது சம்பள உயர்வல்ல. 20 வருடங்களுக்கு மேலாக இருந்த சம்பள முரண்பாட்டையே தீர்ப்பதற்கு முன்மொழியப்பட்டது.

தற்போது ஏற்பட்டுள்ள வாழ்க்கைச் செலவைச் சமாளிப்பதற்கு அனைத்து அரச மற்றும் தனியார் துறையினருக்கும் சம்பள உயர்வை வழங்க முடிந்தால் அது சிறந்த விடயமாகும்.

ஆனால், கடும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் 24 வருடமாகக் காணப்பட்ட ஆசிரியர் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்க்க வேண்டியிருந்தது.

ஆகவே, அனைத்து அரச துறை ஊழியர்களுக்கும் சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு விருப்பம் இருந்தாலும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இந்த அதிகரிப்பு முடியாத விடயம் என்பதை கடந்த வாரத்தில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் நிதி அமைச்சர் தெரிவித்தார். – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கலாநிதி வஜிரா சித்ரசேனவுக்கு இந்திய அரசால் பத்மஸ்ரீ விருது



இலங்கையின் நடனக் கலையை சர்வதேச அரங்கிற்கு எடுத்துச் சென்ற முன்னணி நடனக் கலைஞரான தேசபந்து கலாநிதி வஜிரா சித்திரசேனவுக்கு இந்திய அரசாங்கத்தால் வழங்கப்படும் உயரிய விருதான பத்மஸ்ரீ விருது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் இலங்கைக் கான இந்திய உயர்ஸ்தானிகர் எச்.ஈ.கோபால் பாக்லேயால் நேற்று (புதன்கிழமை) அலரி மாளிகையில் வைத்து வழங்கப்பட்டது.

ஆண்டுதோறும் இந்திய குடியரசு தினத்தன்று அறிவிக்கப்படும் இந்தியாவின் உயரிய விருதுகளில் ஒன்றான பத்மஸ்ரீ விருது 2020 ஆம் ஆண்டுக்காக கலைத் துறையில் ஆற்றிய சேவைக்காக கலாநிதி வஜிரா சித்திரசேனவுக்கும், இலங்கையில் ஹிந்தி மொழியை பிரபலப்படுத்தி இலக்கியம் மற்றும் கல்வித்துறையில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய மறைந்த பேராசிரியர் இந்திரா தசநாயக்கவுக்கும் வழங்கப்பட்டது.

புதுடெல்லியில் உள்ள ராஷ்டிரபதி பவனில் வைத்து 2021 நவம்பர் 8 ஆம் திகதியன்று இந்திய ஜனாதிபதி ஸ்ரீ ராம்நாத் கோவிந்தால் பேராசிரியர் இந்திரா தசநாயக்க சார்பில் அவரது மகள் வத்சலா தசநாயக்க பத்மஸ்ரீ விருதைப் பெற்றுக்கொண்டார்.

கலாநிதி பண்டித் டப்ளிவ்.ஏ.அமரதேவ 2002ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருதைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் பிரதமர் அலுவலக பணிக்குழாம் பிரதானி யோஷித ராஜபக்ஷ, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, இந்திய உயர் ஸ்தானிகர் விநோத் கே. ஜாகொப் உள்ளிட்ட இந்திய உயர்தூதரக அலுவலக அதிகாரிகள் மற்றும் கலாநிதி வஜிரா சித்ரசேன வின் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வான்கூவர் நகரை புரட்டிப்போட்ட புயல்

நூற்றாண்டிற்கு ஒருமுறை ஏற்படும் வானிலை நிகழ்வு என்று அதிகாரிகளால் விவரிக்கப்பட்ட புயல், கனடாவின் வான்கூவர் நகரை கடுமையாக பாதித்துள்ளது. புயல் காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் மேற்கு கடற்கரை நகரை இணைக்கும் இரண்டு நெடுஞ்சாலைகள் கடுமையான சேதமடைந்துள்ளன.

கடந்த திங்கட்கிழமை வீசிய பாரிய புயல் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்றும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதேவேளை நெடுஞ்சாலை அருகே இடம்பெற்ற நிலச்சரிவில் ஒரு பெண் உயிரிழந்தார் என்றும் குறைந்தது இரண்டு பேரைக் காணவில்லை என்றும் மீட்புப் பணியாளர்கள் கூறுகின்றனர்.

மேலும் வான்கூவரில் இருந்து 250 கி.மீ தொலைவில் உள்ள லில்லூட் அருகே பெண்ணின் உடல் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.



# பெலரஸில் புலம்பெயர் மக்கள் மீது கண்ணீர் புகை தாக்குதல்




பெலரஸில் இருந்து நாட்டிற்குள் நுழைய முயன்ற குடியேற்றவாசிகளுக்கு எதிராக போலந்துப் படைகள் கண்ணீர்ப் புகை மற்றும் நீர் தாரைப் பிரயோகங்களை மேற்கொண்டுள்ளனர்.

எல்லைக் கடவைக் காக்கும் போலந்துப் படைகள் மீது குடியேற்றவாசிகள் கற்கள் மற்றும் பிற பொருள்களை கொண்டு வீசுவதை வீடியோ காட்சிகள் காட்டுகின்றன.

பல வாரங்களாக, மத்திய கிழக்கில் இருந்து ஆயிரக்கணக்கான புலம்பெயர்ந்தோர், ஐரோப்பிய ஒன்றியத்தை அடையும் முயற்சியில் பெலரஸ் எல்லையில் கூடி வருகின்றனர்.

மேலும் ஐரோப்பிய ஒன்றியத்தை சீர்குலைக்க புலம்பெயர் மக்களை எல்லைக்கு தள்ளியதாக பெலரஸ் மீது குற்றம் சாட்டப்பட்டது, இருப்பினும் இந்த குற்றச்சாட்டை அந்த அரசாங்கம் மறுத்துள்ளது. நீண்டகாலமாக அலெக்சாண்டர் லுகாஷென்கோ கடந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றார் என அறிவித்ததில் இருந்து ஐரோப்பிய ஒன்றிய பெலரஸ் உறவுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன அத்தோடு வாக்கெடுப்பை அடுத்து ஐரோப்பிய ஒன்றியம் பெலரஸ் மீது பொருளாதாரத் தடைகளை விதித்தது.

இந்த மாதம் இதுவரை பெலரஸிலிருந்து போலந்திற்குள் குடியேற 5,000 க்கும் மேற்பட்டவர்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.



# தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி உயிரிழப்பு; 4 நாள் துக்கம்

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டி கிளர்க் உயிரிழந்தமையை அடுத்து நான்கு நாள்களை துக்கத்தினத்தை அந்நாட்டு அரசாங்கம் அறிவித்தது.

அதன்படி கடந்த புதன்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை தேசிய துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது தேசியக் கொடியை அரைக் கம்பத்தில் பறக்க விடவும் அந்நாட்டு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார். புற்று நோயால் பாதிக்கப்பட்ட டி கிளர்க் கடந்த வாரம் வியாழக்கிழமை தனது 85வது வயதில் காலமாகியிருந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இறுதிச் சடங்கு இடம்பெற்றிருந்தது.



# உகாண்டா தலைநகரை குறிவைத்து தற்கொலை குண்டுத் தாக்குதல்

உகாண்டா தலைநகர் கம்பாலாவை குறிவைத்து தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலில் குறைந்தது 3 பேர் உயிரிழந்துள்ளமையுடன் 30 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என அந்நாட்டு பொலிஸார் கூறியுள்ளனர்.

மோட்டார் சைக்கிள்களில் வந்த மூன்று தாக்குதல்காரர்கள் நாடாளுமன்றம் மற்றும் நகரின் பொலிஸ் தலைமையகத்திற்கு அருகில் தங்களைத் தாங்களே வெடிக்கச் செய்துள்ளனர். குண்டுவெடிப்பால் பலரின் உடல்கள் வீதிகளில் சிதறி இருக் கின்றன என தெரிவித்துள்ள பொலிஸார், உயிரிழப்பு எண் ணிக்கை அதிகரிக்கலாம் என் றும் தெரிவித்துள்ளனர். இந்த தாக்குதலின் பின்னணியில் தாங்கள் இருப்பதாக ஐ.எஸ். அமைப்பு கூறியதாக அமாக் செய்தி நிறுவனம் தெரிவித் துள்ளது.

இதேவேளை நகரின் வேறு பகுதிகளில் இருந்தும் வெடி குண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் நகரின் மற்றுமொரு பகுதியில் வைத்து நான்காவது தாக்குதல்தாரி கைது செய்யப்பட்டார் எனவும் வெடிகுண்டு அங்கிருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆர்மீனிய எல்லையில் மோதல்; பலர் உயிரிழப்பு


எல்லையில் இடம்பெற்ற மோதலில் ஏராளமான ஆர்மீனிய வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் பலர் சிறைபிடிக்கப்பட்டனர் எனவும் ஆர்மீனிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை குறித்த மோதலில் தமது படையைச் சேர்ந்த இருவர் காயமடைந்தனர் என அஜர்பைஜான் அதிகாரிகள் கூறியுள்ளனர். குறித்த மோதலிற்கு அஜர்பைஜான் படையினரே காரணம் என குற்றம் சாட்டியுள்ள ஆர்மீனியா, 15 வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் 12 பேர் சிறைபிடிக்கப்பட்டனர் எனவும் கூறியுள்ளது.

சர்ச்சைக்குரிய நாகோர்னோ கரபாக் பிரதேசத்தில் கடந்த ஆண்டு இடம்பெற்ற போரில் 6,000 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

குறித்த பிராந்தியத்தில் துருக்கியின் ஆதரவுடன் அஜர்பைஜான் படைகள், அந்நாட்டின் ஷரு பகுதியாக கருதப்படும் குறித்த இடத்தில் பெரும் பகுதியை மீண்டும் கைப்பற்றியுள்ளன. இந்நிலையில் அஜர்பைஜானுக்கு எதிராக தனது பிராந்திய இறையாண்மையைப் பாதுகாக்க உதவுமாறு, முக்கிய பாதுகாப்பு நட்பு நாடான ரஷ்யாவிடம் ஆர்மீனியா கேட்டுக் கொண்டது.

இதனை அடுத்து ரஷ்யாவின் தலையீட்டுக்கு பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை இரு தரப்பினரும் போர்நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டனர் எனக் கூறப்படுகிறது.



# முல்லைப் பெரியாறு அணை 141 அடியை எட்டியது அபாய எச்சரிக்கையோடு நீர் வெளியேற்றம்



முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 141 அடியை எட்டியுள்ள நிலையில், விநாடிக்கு 772 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருவதாகத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தேனி மாவட்டத்தில் நேற்று மாலையில் இருந்து கனமழை பெய்துவருகிறது. இதனால் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் இன்று காலை 141 அடியை எட்டியுள்ளது. இதையடுத்து கேரளாவின் இடுக்கிமாவட்டத்தில் உள்ள வண்டிப் பெரியாறு, சப்பாத்து, உப்புத்தர உள்ளிட்ட கரையோரப் பகுதி மக்களுக்கு தமிழக பொதுப்பணித்துறை சார்பில் இரண்டாம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

மேலும், உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி 'ரூல் கேர்வ்' முறை அமுலில் உள்ளதால் அணையின் நீர்மட்டத்தை 141 அடியாக நிலை நிறுத்துவதற்காக இரண்டு மதகுகள் திறக்கப்பட்டு, விநாடிக்கு 772 கன அடி நீர் கேரளாவிற்கு வெளியேற்றப்பட்டு வருகிறது.

தமிழக பொதுப்பணித்துறை அதிகாரிகள் மதகுகளைத் திறந்து கேரளாவிற்கு உபரி நீரை வெளியேற்றி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது முல்லைப் பெரியாறு அணையிலிருந்து தமிழகத்திற்கு விநாடிக்கு 2,300 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது என்றும் அணையின் நீர் இருப்பு 7,396 மில்லியன் கன அடியாக இருப்பதாகவும், நீர்வரத்து விநாடிக்கு 3,348 கன அடியாக உள்ளதென்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## டெல்லியில் கட்டுமானப் பணிகளுக்கு விதித்த தடையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மனு



இந்தியத் தலைநகர் டெல்லியில் நிலவும் காற்று மாசுபாட்டைக் காரணம்காட்டி கட்டுமானப் பணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் எனக் கோரி உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கட்டுமானத் தொழிலாளர்கள் சங்கம் சார்பில் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில், டெல்லி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் காற்று மாசைக் குறைக்கும் பொருட்டு கட்டுமானப் பணிகளுக்கு முழுமையாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமல் மாற்று ஏற்பாடுகள் எதையும் செய்யாமல் திடீரென இப்படியான தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பது தொழிலாளர்களுக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே, கட்டுமானத் தொழிலாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு உரிய இழப்பீடு வழங்கவேண்டும் என்றும் இதற்கென்று உரிய வழிகாட்டு நெறிமுறைகளை அரசுகள் உருவாக்காததை கவனத்தில் கொண்டு, உரிய உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கட்டுமானங்களை இடிப்பது மற்றும் பள்ளம் தோண்டுவது போன்றவைகளால்தான் அதிகளவில் மாசு ஏற்படும். எனவே, அவற்றுக்கு மட்டும் தடை விதிக்காமல் ஒட்டுமொத்தக் கட்டுமானப் பணிகளுக்கும் தடை விதித்திருப்பதை மாற்றியமைக்க வேண்டும். காற்று மாசுபாட்டை காரணங்காட்டி அரசுகள் இத்தகைய தடை உத்தரவைப் பிறப்பித்திருப்பது லட்சக்கணக்கான தொழிலாளர்களைப் பாதிக்கும் வகையில் இருக்கிறது. வாகனங்களுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கும்போது ஒரு மாதத்திற்கு முன்பாகவே அரசுகள் உரிய விளம்பரங்களைச் செய்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது, கட்டுமானங்களுக்கான தடைகளை விதிக்கும்போது மட்டும் உடனடியாக அமுல்படுத்துவது ஏன்? எனவும் மனுவில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

## ஜனநாயக அமைப்புக்களை இணைக்க 'ஒரே நாடு ஒரே பேரவை' தேவையாம்

### என்கிறார் பிரதமர் மோடி

இந்திய நாட்டின் அனைத்து ஜனநாயக அமைப்புகளையும் இணைக்க 'ஒரே நாடு ஒரே பேரவை' நடைமுறை தேவை என பிரதமர் மோடி கருத்துத் தெரிவித்துள்ளார்.

82 ஆவது அகில இந்திய சபாநாயகர்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர், இந்தியாவிற்கு ஜனநாயகம் வெறும் நடைமுறை அல்ல என்றும் இந்திய வாழ்க்கையின் அங்கமான ஜனநாயகம் நமது இயல்பிலேயே ஊறியது எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்தின் கூட்டாட்சி முறையில், நாம் 'அனைவருக்குமான முயற்சி' பற்றி பேசும்போது இந்தியாவின் அனைத்து மாநிலங்களின் பங்கு இதற்குப் பெரிய அடிப்படையாகும் என்றும், கொரோனாப் பெருந்தொற்றுக்கு எதிரான போராட்டம் 'அனைவருக்குமான முயற்சி'க்கு மிகப்பெரிய உதாரணம் என்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சுட்டிக்காட்டினார்.

சட்டமன்ற அவைகளின் பாரம்பரியங்களும், நடைமுறைகளும் இந்தியாவின் இயல்பாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்திய அவர், 'ஒரே பாரதம் உன்னத பாரதம்' என்ற இந்திய உணர்வை வலுப்படுத்த அரசு கொள்கைகளையும், சட்டங்களையும் வகுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். மிக முக்கியமாக, பொது அவையில் நமது தனிப்பட்ட நடத்தை இந்திய மாண்புகளுக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். நம் அனைவருக்கும் இது பொறுப்பாகும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

தரமான விவாதங்களுக்காக தனி நேரத்தை ஒதுக்கலாமா, என்பதைப் பரிசீலிக்கலாம் எனவும் இந்தியப் பிரதமர் ஆலோசனை வழங்கினார். அத்தகைய விவாதங்களில் கண்ணியமான பாரம்பரியங்கள் மற்றும் அதன் தீவிரத்தன்மை முழுமையாகப் பின்பற்றப்பட வேண்டும் என்றும், யார் மீதும் அரசியல் ரீதியான அவதூறுகளைக் கூறக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தினார்.

## திருவெண்ணாமலை உச்சிக்குச் செல்ல பக்தர்களுக்கு தடைவிதிக்கப்பட்டது

திருவெண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் கார்த்திகை தீபத் திருவிழா கடந்த 10 ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. கடந்த ஆண்டைப் போன்றே இந்த ஆண்டும் கொரோனா பரவல் தடுப்பு நடவடிக்கை காரணமாக கோவிலில் உற்சவநிகழ்ச்சிகள் நடைபெறும்போது பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய அனுமதி வழங்கப்படவில்லை.



இதேபோல, 20 ஆம் திகதிவரை கோவிலில் பக்தர்கள் சாமி தரிசனம் செய்யவும், கிரிவலம் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தீபத்திருவிழாவின் பிரதான நிகழ்ச்சியாக இன்று மாலை 6 மணியளவில் 2,668 அடி உயர மலை உச்சியில் மகாதீபம் ஏற்றப்படவுள்ளது. இதனையொட்டி நாளை அதிகாலையிலேயே கோவில் நடை திறக்கப்பட்டு அதிகாலை 4 மணியளவில் சாமி சன்னதியில் உள்ள அர்த்த மண்டபத்தில் பரணிதீபம் ஏற்றப்பட்டது.

மாலையில் பஞ்சமூர்த்திகள் சாமி சன்னதி முன்பாக எழுந்தருள்வார்கள். தொடர்ந்து 6 மணிக்கு ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே காட்சி தரும் அர்த்தநாரீஸ்வரர், சாமி சன்னதியில் இருந்து ஆடியபடியே கொடிமரம் வந்து பக்தர்களுக்கு காட்சி தருவார். அர்த்தநாரீஸ்வரர் காட்சி தந்ததும் மாலை 6 மணியளவில் சாமி சன்னதி முன்பு அகண்டதீபம் ஏற்றப்படும். அதேநேரத்தில் மலையுச்சியில் மகாதீபம் ஏற்றப்படும். மலையுச்சியில் ஏற்றப்படும் மகா தீபத்தைக்காண ஆயிரக்கணக்கான பக்தர்கள் மலையேறி உச்சிக்கு செல்வது வழக்கமான நடைமுறையாயினும் இந்த ஆண்டு பக்தர்கள் மலையேறவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு மாநகரசபையின் 2022 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் கொண்டு வருவதில் சிக்கல்



மட்டக்களப்பு மாநகரசபையின் 2021ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டங்களை மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளர் உட்பட அதிகாரிகள் நடைமுறைப் படுத்தாத காரணத்தினால் 2022ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தினை கொண்டு வருவதில் பல சிக்கல்கள் உள்ளன என மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட பாதீடு தயாரிக்கும் போது பொது மக்களின் கருத்துக்களையும் உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் மக்களின் கருத்துக்களைக் கொண்டு பாதீடுகளை தயாரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் பொது அமைப்புக்களின் கருத்துக்களை அறியும் வகையிலான கூட்டம் இன்று மாலை மட்டக்களப்பு மாநகரசபையில் நடைபெற்றது.

2022ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தினை மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சனசமூக நிலையங்கள்,கிராம அபிவிருத்தி சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாநகரசபையினால் எதிர்வரும் 2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட தயாரிப்புகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் அந்த வரவு-செலவுத்திட்டத்தில் பொது மக்களின் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையிலேயே இந்த கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன என இங்கு தெரிவிக்கப்பட்டது.

எனினும் 2021ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகளை மாநகரசபை நிர்வாகம் நடைமுறைப்படுத்தாத காரணத்தினால் 2022ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டை சனசமூக நிலையங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தவுள்ளதாக இங்கு தெரிவிக்கப்பட்டது.

இங்கு கருத்து தெரிவித்த மாநகரசபை முதல்வர்,மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட மாநகரசபை முதல்வர் மற்றும் உறுப்பினர்கள் கொண்ட சபையில் முன்மொழியப்படும் திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டிய பொறுப்பு மாநகரசபை ஆணையாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு உள்ளது.

ஆனால் மட்டக்களப்பு மாநகர சபையில் மக்களுக்காக கொண்டுவரப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை தடுக்கும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மாநகர சபையின் ஆணையாளரின் செயற்பாடுகள் காரணமாக பல அபிவிருத்தித்திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன எனவும் மாநகர முதல்வர் இதன்போது தெரிவித்தார்.

## திருகோணமலை கந்தளாயில் விபத்து 7 பேர் வைத்தியசாலையில் அனுமதி

கந்தளாய் - கொழும்பு பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் பௌத்த பிக்கு உட்பட ஏழு பேர் படுகாயமடைந்த நிலையில் கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என கந்தளாய் பொலிஸார் தெரிவித்தனர்

நேற்று மாலை கந்தளாய்-கொழும்பு பிரதான வீதி 87 ஆம் கட்டை பகுதியில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று இரவு கொழும்பிலிருந்து மூதூர் சேருவில விகாரைக்கு வருகை தந்து வழிபாடுகளை நிறைவு செய்து விட்டு மீண்டும் சேருவில பிரதேசத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போதே பிக்குகள் பயணித்த வான் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த பௌத்த பிக்கு உட்பட 7 பேர் படுகாயமடைந்துள்ளனர் என கந்தளாய் பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த 7 பேரும் தற்போது கந்தளாய் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கந்தளாய் தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



## மட்டக்களப்பு மாவட்டத்தில் காட்டுயானைகள் அட்டகாசம்



மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள கொனாகொல்ல, ஜெளசிறிபுர, உள்ளிட்ட அப்பகுதியில் அமைந்துள்ள கிராமங்களுக்குள் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு புகுந்த காட்டுயானைகள் அங்கிருந்த பயன்தரும் பல மரங்களை துவம்சம் செய்துவிட்டுச் சென்றுள்ளன என அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிராமங்களுக்குப் புகுந்து மா, பலா, வாழை, அன்னாசி, கரும்பு உள்ளிட்ட பயன் தரும் பல மரங்களை இவ்வாறு உடைத்து சரித்து விட்டுச் சென்றுள்ளன எனவும், இதனால் தாம் பரம்பரை பரம்பரையாகச் செய்து வந்த வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும், அப்பகுதி மக்கள் அங்கலாய்க் கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதியில் மிக நீண்ட காலமாகவிருந்து இவ்வாறு காட்டு யானைகளின் அட்டகாசங்கள், தொடர்கதையாகவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மட்டக்களப்பில் இலவச சேதன திரவப்பசளை விநியோகம்

மட்டக்களப்பில் பெரும்போகத்திற்காக அரசினால் வழங்கப்படும் இலவச சேதன திரவப்பசளைகள் விநியோகம் மண்முனைமேற்கு வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. 'பசுமையான நாடு, நஞ்சு விசமற்ற நாளை' எனும் தொனிப் பொருளில் இயற்கை திண்மத் தாவரப் போசாக்கைப் பயன்படுத்தி நெற்செய்கை பண்ணும் வேலைத்திட்டத்திற்கமைவாக மண் முனைமேற்கு வவுணதீவு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர் தலைமையில் மண்டபத்தடி கமநலசேவைகள் நிலையத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சேதன திரவப்பசளை, நனோ நைட்ரஜன் திரவப் பசளை மற்றும் சேதனப்பசளை என்பன வழங்கிவைக்கப்பட்டன.

கமநல அபிவிருத்தி பிரதேச உத்தியோகத்தர் கே.உதயகுமாரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தேசிய உரச்செயலகத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே.எல். எம். சிராஜுதீன், கமநல சேவைகள் திணைக்கள பிரதி ஆணையாளர் கே.ஜெகந்நாத் உள்ளிட்ட அதிகாரிகள், சேதன திரவப் பசளை விநியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது இத்திரவ சேதனப்பசளை பயன்படுத்தும் விதம் தொடர்பாகவும் விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது. இலவசமாக வழங்கப்படும் இத்திரவ சேதனப்பசளை ஒரு ஹெக்டேயருக்கு 10 லீற்றர் என்ற வீதத்தில் வழங்கப்படுகின்றது.

10 நாள்கள் வயது கொண்ட நெற்பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 2 லீற்றர் என்ற அடிப்படையில் இத்திரவப் பசளை விசிரப்பட வேண்டும். மேலும் முதலாவது விசிரல் செய்யப்பட்டு 10 நாள்களின்பின் இரண்டாவது தடவையாக அதேஅளவில் இப் பசளை விசிறப்படவேண்டும் எனவும், இப்பசளை விசிறப்பட்டு 6 மணித்தியாலத்திற்குள் மழைபெய்யாதிருக்கும் காலத்தினை விவசாயிகள் தெரிவுசெய்து கொள்வதுடன் திரவப் பசளை விசிறப் படுவது காலை வேளையாக இருப்பது சிறந்தது எனவும் விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

நேற்று வழங்கி வைக்கப்பட்ட இச் சேதன திரவப்பசளை மண்முனைமேற்கு பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் பிரிவிற்கும் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






# நியூசிலாந்துடனான ரி-20 கிரிக்கெட் தொடர் முதலாவது போட்டியில் இந்திய அணி வெற்றி

நியூசிலாந்து அணிக்கெதிரான முதலாவது ரி-20 கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

இந்தியாவின் ஜெய்ப்பூர் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப்போட்டியில், நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட நியூசிலாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 164 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. மார்ட்டின் கப்டில் 70 ஓட்டங்களையும் மார்க் சப்மன் 63 ஓட்டங்களையும் எடுத்தனர். இந்திய அணியின் புவனேஸ்வர் குமார், அஸ்வின் இருவரும் தலா 2 விக்கெட்டுகளையும் தீபக் சஹார் மற்றும் சிராஜ் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 165 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி, 19.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றிபெற்றது. சூர்யகுமார் யாதவ் 62 ஓட்டங்களையும் அணித்தலைவர் ரோஹித் சர்மா 48 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். நியூசிலாந்து அணியின் பந்துவீச்சில், ட்ரெண்ட் போல்ட் 2 விக்கெட்டுக்களையும் டிம் சவுத்தி, மிட்செல் சான்ட்னர் மற்றும் டரில் மிட்ச்செல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக சூர்யகுமார் யாதவ் தெரிவுசெய்யப்பட்டார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ரி-20 போட்டி நாளை ராஞ்சியில் நடைபெறவுள்ளது.

# ஐ.சி.சி. கிரிக்கெட் குழுவின் தலைவராக இந்தியாவின் சௌரவ் கங்குலி நியமனம்



இந்திய கிரிக்கெட் அணியின் புகழ்மிக்க அணித்தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்த சௌரவ் கங்குலி, கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றதும் மேற்கு வங்கக் கிரிக்கெட் சங்கத்தின் தலைவராக செயற்பட்டிருந்தார். அதன்பின் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் (பி.சி.சி.ஐ.) தலைவராக நியமிக்கப்பட்டார்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) தலைவராகும் வாய்ப்பு சில காரணங்களால் நழுவிப்போன நிலையில், அவர் இப்போது ஐ.சி.சி. கிரிக்கெட்குழுவின்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய அணியின் மற்றொருமுன்னாள்தலைவரான அனில் கும்ப்ளே கடந்த 2012 இல் இருந்து மூன்று முறை மூன்று வருட பதவிக்கால அடிப்படை யில் அப்பதவியை வகித்துவந்தார். அவரது பதவிக்காலம் முடிவடைந்ததையொட்டி, தற்போது அவருக்குப் பதிலாக சௌரவ் கங்குலி நியமிக்கப்பட்டுள்ளார். சௌரவ் கங்குலியை கிரிக்கெட் குழுவின் தலைவர் பதவிக்கு வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன் என ஐ.சி.சி. தலைவர் கிரேக் பார்க்ளே தெரிவித்துள்ளார்.



# இலங்கைக் கிரிக்கட் அணியின் பயிற்சியாளர் மிக்கி ஆர்த்தர் விரைவில் விடைபெறுகிறார்

இலங்கைக் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளரான மிக்கி ஆர்த்தர் பதவிவிலகவுள்ளார் என வெளியான தகவல்கள் தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. மிக்கி ஆர்த்தர் தனது டுவிட்டர் பக்கத்தில் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளதையடுத்து அவர் பதவி விலகுவது நிச்சயமாகியுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின்ற மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருடன் இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர் பதவியில் இருந்து விலகுகிறேன் என அவர் அறிவித்துள்ளார். மிக்கி ஆர்த்தருடன் இலங்கைக் கிரிக்கெட் சபை மேற்கொண்டிருந்த ஒப்பந்தமானது மேற்கிந்தியத் தீவுகளுடனான டெஸ்ட் தொடருடன் நிறைவடைய விருந்த நிலையில், அந்தஒப்பந்தத்தைநீடித்துக்கொள்ள அவர் விரும்பவில்லை என்று அறிவித்துவிட்டார் எனவும், அவரைத் தக்கவைத் துக்கொள்ள இலங்கைக் கிரிக்கெட் சபை மேற்கொண்ட பேச்சு பயனளிக்கவில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

இங்கிலாந்தின் கவுன்டி அணிகளிலொன்றான டேர்பிசையரின் பயிற்சியாளராக ஆர்த்தர் இணைந்து கொள்ளவிருப்பது குறித்து அந்தக் கழகம் உறுதிப்படுத்தியுள்ளது. இலங்கையணிக்குப் பயிற்சியளிப்பதற்கு முன்னதாக ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் அணிகளுக்கு அவர் பயிற்சியாளராகச் செயற்பட்டிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையணி புதியதொரு பயிற்சியாளரைத் தேடும் முயற்சியிலிருக்கும் இந்த நேரத்தில், கடந்த பத்து வருடங்களில் இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு ஏழு தலைமைப் பயிற்சியாளர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

# உலகக் கிண்ணக் கால்பந்தாட்டம் ஆர்ஜென்டினா, நெதர்லாந்து தகுதி

உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் அடுத்த ஆண்டு நவம்பர் 21 முதல் டிசெம்பர் 18 வரை கட்டாரில் நடைபெறவிருக்கிறது. இந்தத் தொடரில் 32 நாடுகள் பங்கேற்கின்றன.

போட்டியை நடத்தும் கட்டார் மட்டுமே நேரடியாக இந்தத் தொடரில் விளையாடவுள்ள நிலையில், மீதியுள்ள 31 நாடுகளும் தகுதிச் சுற்று மூலமே முன்னேற முடியும். இதற்கான தகுதிச் சுற்று ஆட்டங்கள் உலகின் பல்வேறு நாடுகளிலும் நடைபெற்று வருகின்றன.

நான்கு முறை சம்பியனான ஜேர்மனி, டென்மார்க், 5 முறை கிண்ணத்தை வென்ற பிரேஸில், 2 தடவை சம்பியனான பிரான்ஸ், பெல்ஜியம், குரோஷியா, 2010 ஆம் ஆண்டு சம்பியனான ஸ்பெயின், செர்பியா, 1966 ஆம் ஆண்டு சம்பியனான இங்கிலாந்து, சுவிட்ஸர் லாந்து ஆகிய நாடுகள் ஏற்கனவே தகுதி பெற்றுவிட்டன. இந்த நிலையில் தென் அமெரிக்கக் கண்டத்தில் உள்ள ஆர்ஜென்டினா, ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள நெதர்லாந்து ஆகிய அணிகளும் தகுதி பெற்றுள்ளன.

சான்ஜுயான் நகரில் நடந்த தகுதிச் சுற்று ஆட்டம் ஒன்றில் ஆர்ஜென்டினா-பிரேஸில் அணிகள் மோதியிருந்தன. இந்த ஆட்டம் கோல் எதுவுமின்றி சம நிலையில் முடிந்தாலும் அதற்கு முன்னதான பெறுபேறுகளினடிப்படையில் ஆர்ஜென்டினா அணி உலகக் கிண்ணத் தொடருக்கு 18 ஆவது முறையாக தகுதி பெற்றுள்ளது.

இதில் இரண்டு முறை அந்த அணி (1978, 1986) சம்பியன் பட்டம் பெற்றிருக்கிறது.

இதேபோல ஐரோப்பாக் கண்டத்தில் நடந்த தகுதிச் சுற்று ஆட்டத்தில் நெதர்லாந்து 2-0 என்ற கணக்கில் நோர்வேயை வீழ்த்தியது. இதன் மூலம் அந்த அணியும் உலகக் கிண்ணத் தொடருக்குள் நுழைந்தது. ஐரோப்பாக் கண்டத்தில் வலுவான அணிகளில் ஒன்றான நெதர்லாந்து, கடந்த உலகக் கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற்றிருக்கவில்லை. தற்போது அந்த அணி வீரர்கள் தகுதிச் சுற்றில் சிறப்பான பங்களிப்பை வெளிப்படுத்தியுள்ளனர். நெதர்லாந்து அணி 10 ஆவது முறையாக உலக கிண்ணக் கால் பந்தாட்டத் தொடருக்குத் தகுதி பெற்றுள்ளது. அந்த அணி தொடரில் 3 முறை 2 ஆவது இடத்தைப்பிடித்துள்ளது.








காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை நிறுவனமயப்படுத்தி தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பயணிக்கவும் தீர்மானம்

## யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணன் திட்டம்



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கட்டமைப்புக்களை நிறுவனமயப்படுத்தி வலுப்படுத்த உள்ளதாகவும், எதிர்காலத்தில் தமிழ்த் தேசிய அரசியலை சிதைக்காத வகையில் தமிழ்த்தேசிய பரப்பில் பயணிக்கும் கட்சிகளுக்குள் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தி ஒற்றுமையுடன் பயணித்து எமது அரசியல் இலட்சியத்தையும், பொருளாதார சுபீட்சத்தையும் வென்றெடுக்கப் போராடத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும், ஊடகப் பேச்சாளரும், யாழ். மாநகர சபை முதல்வருமான சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு நேற்று (புதன்கிழமை) அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலையே அவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு –

திட்டமிட்டு சிதைக்கப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கட்டமைப்புக்களை நிறுவனமயப்படுத்தி வலுப்படுத்துவது தொடர்பாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாக உறுப்பினர்களுடான சந்திப்பு ஒன்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் மாநகர முதல்வருமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையில் கடந்த 9.11.2021 அன்று வவுனியாவில் நடைபெற்றது.

கடந்த பல ஆண்டுகளாகத் தென்னிலங்கை சக்திகளின் நிகழ்ச்சி நிரலில் தமிழ்த்தேசிய அரசியல் திட்டமிட்டு சிதைக்கப்பட்டுவருகின்றது. அதன் தொடர்ச்சியாகவே தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியையும் சிதைத்து அழிக்கும் முயற்சியும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தமிழ்த் தேசியவாத சக்திகளை சிதைத்து அழிக்கும் வகையில் நிகழ்த்தப்படும் இந்தச் சதித் திட்டங்களை முறியடித்து தமிழ்த்தேசிய அரசியலை நீர்த்துப்போகச் செய்யாமல் ஒன்றுபட்டு பேரெழுச்சி கொள்ளும் வகையில் செயற்படவேண்டிய காலம் இது.

அண்மைய காலத்தில் எமது அமைப்பிற்குள்இருந்துஅமைப்பைசிதைப்பதன் மூலம் தமிழ்த் தேசிய சக்திகளை பல கூறிடும் சதித்திட்டம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

சிங்களபௌத்தபேரினவாதஅரசாங்கம் விரும்புகின்ற வகையில் தமிழ்த் தேசியபரப்பில்பயணிக்கின்றகட்சிகளின் ஒற்றுமையைக் குலைத்து சிறு சிறு காரணங்களுக்காகத் தமிழ்த்தேசிய அரசியலைக் கூறுபோடுகின்றமை சிங்கள தேசியவாதத்தை வலுப்படுத்துகின்றது.

அந்த வகையில் இந்தக் காலத்தின் தேவையறிந்து தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் கட்டமைப்புக்களை நிறுவனமயப்படுத்தி வலுப்படுத்துவது என இந்தக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் தமிழ்த்தேசியம் சார்ந்து இயங்கும் கட்சிகள் மேற்கொள்ளும் மக்கள் நலன் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளிலும் முழுமனதுடன் பங்குபற்றுவது என்றும், எதிர்காலத்தில் தமிழ்த்தேசிய அரசியலை சிதைக்காத வகையில் தமிழ்த்தேசிய பரப்பில் பயணிக்கும் கட்சிகளுக்குள் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தி ஒற்றுமையு டன் பயணித்து எமது அரசியல் இலட்சியத்தையும், பொருளாதார சுபீட்சத்தையும் வென்றெடுக்கப் போராடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

சுமார் 5 மணி நேரம் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சிவகுரு இளங்கோ, மன்னார் மாவட்ட அமைப்பாளர் சகாயம், மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் யெகநீதன், பொருளாளர் நாதன், திருகோணமலை மாவட்ட முன்னாள் அமைப்பாளர் கரிஹரன், வவுனியா மாவட்ட நிர்வாகிகளான தமிழழகன், முன்னாள் நகரசபை உறுப்பினர் யானுஜன், கிளிநொச்சி மாவட்ட இளைஞர் அணி தலைவர் முபிள்யான், முல்லைத்தீவு மாவட்ட செயற்பாட்டாளர் சங்கீர்த்தன், முன்னணியின் மூத்த உறுப்பினர்கள் பார்த்திபன், சி. த. காண்டீபன், விளையாட்டுத் துறை பொறுப்பாளர் வீரா, யாழ்மாவட்ட, மகளீர் அணி செயற்பாட்டாளரும் நல்லூர் பிரதேச சபை உறுப்பினருமான திருமதி கௌசலா சிவா, இளைஞர் அணி தலைவரும் வலி தெற்கு பிரதேச சபை உறுப்பினருமான லகிந்தன், ஊடக துறையைச் சார்ந்த விஷ்ணுகாந்த், அலெக்ஸ் ஆகியோர் உட்பட பல மத்திய குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.– என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மரக்கறி வகைகளின் விலைகள் மன்னாரில் சடுதியாக அதிகரிப்பு

நாடளாவிய ரீதியில் மரக்கறி வகைகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ள நிலையில் மரக்கறிகளைக் கொள்வனவு செய்யும் மக்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதுடன் மரக்கறி விற்பனையாளர்களும்வியாபாரம் இன்றிப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தால் ஏற்கனவே மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், சீரற்ற காலநிலை காரணமாக மரக்கறிகளின் விலைகளும் சடுதியாக உயர்ந்துள்ளன.

மன்னார் மாவட்டத்திலும் மரக்கறி வகைகளின் விலைகளும் அதிகரித்துள்ளது. அந்த வகையில் இன்று (வியாழக்கிழமை) ஒரு கிலோ கரட் 380 ரூபா வரையும், லீக்ஸ் 340 ரூபா வரையும், கத்தரிக்காய் 350 ரூபா வரையும், கறிமிளகாய் 480 ரூபா வரையும், பெரிய வெங்காயம் 240 ரூபா வரையும், தக்களி 500 ரூபா வரையும், போஞ்சி 450 ரூபாவுக்கும் பிரதான வியாபார நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

மரக்கறிகளின் விலை சடுதியாக அதிகரித்த நிலையில் மரக்கறிகளை கொள்வனவு செய்யும் மக்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது.

மரக்கறிகளின் விலையேற்றம் காரணமாக மன்னார் மாவட்டத்திலுள்ள விற்பனையாளர்களும் பொது மக்களும் தொடர்சியாகப் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீதிப்போக்குவரத்து தவறுகளுக்கு இனி ஒன்லைன் ஊடாக அபராதம்!

வீதிப்போக்குவரத்து தவறுகளுக்கான அபராதங்களைஒன்லைன்மூலமாகச்செலுத்துவதற்கான தொழில்நுட்ப முறை மற்றும் சட்டம் தயாரிப்பு தொடர்பில் விசேட கலந்துரையாடலொன்று கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. பணம் செலுத்துவதற்கான சட்டம் மற்றும் டிஜிற் றல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட் டுள்ளது.

அதற்குத் தேவையான பரிந்துரைகளை போக்குவரத்து அமைச்சின் செயலாளரின் தலைமையில் அமைச்சர் சரத் வீரசேகரவின் மேற்பார்வையின் கீழ் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு, பொலிஸ், இலங்கை மத்திய வங்கி, மக்கள் வங்கி, லங்கா ஆகியவற்றின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழு நியமிக்கப்பட்டது.

இந்த குழு அடுத்த ஆண்டு ஜனவரிக்குள் தனது பரிந்துரைகளை சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிறகு புதிய சட்டம் மற்றும் தொழில்நுட்பத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பில் பரிசீலிக்கப்படும்.

இந்த புதிய வழிமுறையை முதலில் அதிவேக நெடுஞ்சாலைகளில் அமுல்படுத்த வேண்டும் என்றும், பின்னர் ஏனைய வீதிகளிலும் அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

# ‘யுகதனவி’ உடன்படிக்கை அடுத்தவாரம்; நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமாம்

யுகதனவி’ உடன்படிக்கை அடுத்தவாரமளவிலேயே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று (புதன்கிழமை) உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். யுகதனவி உடன்படிக்கை இந்த வாரம் சபையில் சமர்ப்பிக்கப்படும் என அமைச்சர் கூறியிருந்தார். அது இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை. எப்போது சமர்ப்பிக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்.பல்கலை வணிக, முகாமைத்துவ பீட சிறப்பு தேர்ச்சி மாணவர்களுக்குத் தங்கம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக, முகாமைத்துவ பீடத்திலுள்ள கணக்கியல், நிதிமுகாமைத்துவம் மற்றும் வணிகம் (கணக்கியலும், நிதியும்) ஆகிய துறைகளில் பயின்று சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு ஒவ்வொரு வருடமும் இடம்பெறும் பட்டமளிப்பு விழாவின் போது இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் தங்கப் பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்காக வணிக முகாமைத்துவ பீடத்துக்கும், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு நாளை (வெள்ளிக்கிழமை) முற்பகல் 9 மணியளவில், யாழ். பல்கலைக்கழக வணிக, முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவும், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் சார்பில் அதன் தலைவரும், பட்டயக் கணக்காளருமான மனில் ஜெயசிங்கவும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஒப்பமிடவுள்ளனர்.

# சப்ரகமுவ மாகாண பிரதம செயலராக ஜே.பி.எஸ். ஜயலத் நியமிப்பு

கம்பஹா மாவட்ட செயலாளர் ஜே.பி.எஸ். ஜயலத், சப்ரகமுவ மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியால் இந்த நியமனம் வழங்கப்பட்டதாக ஜனாதிபதியின் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.11.2021இல் வெளியிடப்பெற்றது.